| புகார் எண் : | நாள் : |
|---|---|

## தமிழ்நாடு தகவல் ஆணையம் முன்பாக

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005-ன் பிரிவு 18(1)-ன் படி புகார் மனு தாக்கல் செய்கிறேன். அது குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| மனுதாரரின் விவரங்கள் | |
|---|---|
| பெயர் | |
| தந்தை / கணவர் பெயர் | |
| அலைபேசி எண் | |
| மின் அஞ்சல் | |
| பாலினம் | ஆண் |
| பிறந்த தேதி & வயது | |
| நாடு | இந்தியா |
| மாநிலம் | தமிழ்நாடு |

| | |
|---|---|
| மாவட்டம் | |
| முகவரி | |
| அஞ்சல் குறியீடு எண் | |

I . தகவல் பெறும் உரிமை சட்டம் 6(1)-ன் படி மனுவின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | பிரிவு 6(1)-ன் கீழ் பொதுத் தகவல் அலுவலருக்கு அளித்த மனு நாள் | |
| 2 | பொது தகவல் அலுவலரின் விவரம் | |
| 3 | பிரிவு 6(1)-ன் கீழ் பொது தகவல் அலுவலருக்கு அளித்த மனுவின் நகல் இணைக்கவும் | இணைக்கப்பட்டுள்ளது |
| 4 | பிரிவு 6(1)-ன் கீழ் அளித்த மனுவிற்கு பொது தகவல் அலுவலரால் பதில் வழங்கப்பட்டுள்ளது. | ஆம் / இல்லை / பொருந்தாது |
| 5 | ஆம் எனில், நகல் இணைக்கவும். | இணைக்கப்பட்டுள்ளது / பொருந்தாது |
| 6 | பிரிவு 6(1)-ன் கீழ் அளித்த மனுவானது சட்டப்பிரிவு 6(3)-ன் கீழ் பிற பொதுத் தகவல் அலுவலருக்கு மாற்றப்பட்டுள்ளது. | ஆம் / இல்லை / பொருந்தாது |
| 7 | ஆம் எனில், நகல் இணைக்கவும். | இணைக்கப்பட்டுள்ளது / பொருந்தாது |

| | | |
|---|---|---|
| 8 | பிற / புதிய பொதுத் தகவல் அலுவலரின் விவரம் | இணைக்கப்பட்டுள்ளது / பொருந்தாது |
| 9 | பிரிவு 6(3)-ன் கீழ் மாறுதல் செய்யப்பட்ட மனுவிற்கு புதிய பொதுத் தகவல் அலுவலரால் பதில் அளிக்கப்பட்டது | ஆம் / இல்லை / பொருந்தாது |
| 10 | ஆம் எனில், நகல் இணைக்கவும். | இணைக்கப்பட்டுள்ளது / பொருந்தாது |

II . தகவல் பெறும் உரிமை சட்டம் 18(1)-ன் படி , புகார் மனுவின் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனு செய்வதற்கான காரணம் | ü தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்படும் தகவல்கள் வழங்க மறுக்கப்பட்டுள்ளது.<br><br>ü இச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட காலவரம்பிற்குள் தகவல் வழங்கப்படவில்லை.<br><br>ü மனுதாரரை கட்டணம் செலுத்துமாறு அறிவுறுத்திய நிலையில், அது நியாயமற்றது என கருதுகிறேன்<br><br>ü இச்சட்டத்தின் கீழ் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையில்லாதது, தவறானது அல்லது பொய்யானது என நம்புகிறேன் .<br><br>ü இச்சட்டத்தின் கீழ் பதிவுருக்கள் பார்வையிட / ஆய்வு செய்ய கோரும் கோரிக்கைகள் ஏற்க மறுக்கப்பட்டுள்ளது<br><br>ü தமிழக அரசு செயலரின் 23.11.2015 தேதியிட்ட கடித எண் P &AR /41633/AR 3/2015-1 ல் அறிவுறுத்தியுள்ளபடி,,<br><br>a. விண்ணப்பத்திற்கான தனித்துவமான எண் வழங்கப்படவில்லை.<br><br>b. பொது தகவல் அலுவலர், மற்றும் மேல்முறையீட்டு அலுவலரின் பெயர், பதவி, தொடர்பு எண் மற்றும் மின்னஞ்சல் முகவரிகள் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படவில்லை.<br><br>c. வழங்கப்பட்டுள்ள ஆவணங்கள் சான்றொப்பமிட்டு வழங்கப்படவில்லை.<br><br>d. வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொது தகவல் அலுவலரால் கையொப்பமிடப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| 2. | மனுதாரர் புகார் செய் வதற்கான காரணங்கள் தேவைப்படின் | தகவல் பெரும் உரிமை சட்டத்தின் படி, பொது தகவல் அலுவலர் அவர்களால், கேட்கப்பட்ட தகவல்கள் குறித்த காலத்திற்குள் முழுமையாக வழங்கப்படாததாலும், சட்டப்படி வழங்கப்படவேண்டிய தகவல்கள் மறுக்கப்பட்டதாலும் , தவறான தகவல்களை வழங்கியுள்ளதாலும், கீழ்கண்ட வேண்டுதல்களுடன் இப்புகார் மனு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1. சட்டப்பிரிவு 20(1) ன் படி தகவல் வழங்க தவறிய / மறுத்ததாக கருதப்படும், பொது தகவல் அலுவலருக்கு, நாள் ஒன்றிற்கு ரூபாய் 250/- வீதம் அபராதம் விதிக்க வேண்டும்.<br><br>2. சட்டப்பிரிவு 20(2) ன் கீழ் கடமை தவறிய பொது தகவல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க ஆணையம் பரிந்துரை செய்ய வேண்டும்.<br><br>3. சட்டப்பிரிவு 19(8) ன் கீழ், தகவல் கிடைக்கப்பெறாத காரணத்தால் பாதிக்கப்பட்ட விண்ணப்ப தாரருக்கு உரிய நிவாரணம் வழங்கவேண்டும்.<br><br>4. உச்சநீதிமன்ற வழக்கு எண் SLP (C )No .32768-32769/2010 உத்தரவின் படி , இம்மனு பிரிவு 18(1) ன் கீழ் மட்டுமே விசாரிக்கப்படவேண்டும்.<br><br>5. இந்த மனுவை தகவல் வழங்க வலியுறுத்தி எக்காரணம் கொண்டும் பிரிவு 19(3)ன் கீழ் மாற்றக்கூடாது.<br><br>6. அரசின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்வதற்கும், லஞ்ச லாவண்யமற்ற சமூகத்தை கட்டமைப்பதற்கும்,சாமானியனுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரே ஒரு ஆயுதம் இந்த தகவல் அறியும் உரிமை சட்டம் மட்டுமே . தமிழகத்தில் உள்ள பொது தகவல் அலுவலர்கள் , இந்திய குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அரசியல் சாசன உரிமையை பறிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| | | மாநில தகவல் ஆணையம் அனுமதிக்கக் கூடாது என்ற வேண்டுகோளும் வைக்கப்படுகிறது. |

III விசாரணைக்கான விருப்பத்தை தேர்வு செய்யும் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | விசாரணை முறை | ü காணொளி காட்சி விசாரணை |

<u>உறுதிமொழி</u>

விண்ணப்பதாரராகிய நான், ..................... , த/பெ / க /பெ ............................... , மேலே, என்னால் சமப்பிக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் தகவல்கள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரிந்தவை என்றும் அவை அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மை எனவும், சரியானவை எனவும் இதன்மூலம் உறுதியளிக்கிறேன். நான் இதற்கு முன்னர் இதே பொருள் குறித்து ஆணையத்திடம் எந்த புகார் மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

இடம் : ...... தேதி : .................. புகார்தாரரின் கையொப்பம்.